
நரசு ஸ்டுடியோஸ்
ஸ்ரீ
வள்ளி
முழுநீள கலர் படம்
செட்டியார் பிலிம்ஸ் ரிலீஸ்

நரசு ஸ்டுடியோஸ்

அளிக்கும்

# "ஸ்ரீ வள்ளி"

(Dedicated to the revered memory of Late Sri V. L. Narasu).

நடிகர்கள்

சிவாஜி கணேசன்
T. R. மகாலிங்கம்
E. R. சகாதேவன்
J. P. சந்திரபாபு, V. R. ராஜகோபால்

பத்மினி
ராகினி
C. K. சரஸ்வதி
பேபி உமா, ஹெலன்

மற்றும் பலர்.

பின்னணி பாடியவர்கள்:

T. M. சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன்,
P. சுசீலா, ஜிக்கி, ரத்னமாலா, A. P. கோமளா.

இசையமைப்பு:
G. ராமநாதன்.

வசனம், பாடல்கள்:
தஞ்சை ராமய்யாதாஸ்.

டைரக்ஷன்:
T. R. ராமண்ணா.

தயாரிப்பு:
K. வெங்கடேசன் M.A.
L. வெங்கட்ராமன்.

ஸ்டுடியோ:
நரசு.

# ஸ்ரீ வள்ளி
## (கதைச் சுருக்கம்)

★★

திரு முருகனின் பக்தனுகவும், சிற்றூரின் அரசனுகவும் விளங்கிய நம்பிராஜன் வேட்டையாடச் சென்ற போது, வள்ளிக் கிழங்கு அகழ்ந்தக் குழியிலே ஒரு அழகான பெண் குழந்தையைக் கண்டெடுக்கிறுன்.

குழந்தையை நாட்டுக்குக் கொண்டு வந்து, 'வள்ளி' என்ற பெயர் சூட்டி வளர்க்கிறுன். வள்ளியும் இளம் வயதிலிருந்தே முருகன் மீது அளவு இல்லாத பக்தி பூண்டு வளருகிறுள். தக்க பருவமடைந்த வள்ளி, முருகனேயே தனது மணுளனுக எண்ணி, தந்தையின் சொற்படி மற்ருெருவனை மணக்க மறுக்கிறுள். வருத்த முற்ற தந்தை, தனது குருதேவனின் சொற்படி வள்ளியைத் தினைப்புனத்திற்கு அனுப்பினுன்.

தினைப்புனத்திற்கு வந்த வள்ளி, தோழிகளுடன் ஆடிப்பாடி ஆயலோட்டிக் கொண்டிருப்பதை நாரதர் காணுகிறுர். அழகிற் சிறந்த வள்ளிக்கு முருகனே ஏற்ற மணுளன் என்று நாரதர் கூற. 'தன்னை மயக்கி மாலையிட யாராலும் முடியாதென்று கூறுகிறுள்' வள்ளி. நாரதரோ, எப்படியும் தான் நினைத்ததை முடிப்பதாகக் கூறிச் சபதமிட்டு வெளியேறுகிறுர்.

நாரதர், முருகன் கொலு வீற்றிருக்கும் கழுகாசலம் சென்று, வள்ளியை மணம் முடிக்குமாறு முருகனிடம் வேண்டி அவர் சம்மதம் பெருகிறுர்.

முருகன் வேட உருவங் கொண்டு, மானைத் தேடி வந்தவர் போன்று, தினைப்புனத்தில் நுழைந்து, வள்ளியைச் சந்திக்கிறுர். விடாமல் முருகன் அவளைத் தொடர்ந்து செல்லும் போது, வள்ளியின் தந்தையும் அண்ணன்மாரும் வந்து விடவே, வேங்கைமரமாக மாறி விடுகிறுர்.

ஆனுல் மரம், மறுபடியும் வேடனுக உருவெடுக்கிறது. தோழிகளால் வெளியே தள்ளப்பட்ட வேடனை, நாரதர் சந்தித்து முருகனை விருத்தனுகச் செல்லுமாறு வேண்டுகிறுர்.

விருத்தனுக மாறி வந்த முருகனை நம்பி பெரிய ஞானியென்று நினைத்துத் தனது மகளான வள்ளியிடம் அறிமுகப் படுத்திவிட்டுச் செல்லுகிறுன். முருகன் தேனும் தினைமாவும் உண்ணும்போது 'விக்கல்' எடுத்துத் தண்ணீர் வேண்டுமென்று கூறுகிறுர். வள்ளி சுனைக்கு அழைத்துப் போகிறுள். தண்ணீர் குடிக்கும் போது வேண்டுமென்றே சுனையில் விழுந்து விடுகின்றுர் முருகன். வள்ளியையும் தண்ணீரில் இழுத்துத் தள்ளுகிறுர். தாகம் தணிந்துவிட்ட தனக்கு வள்ளியின் மீது ஏற்பட்ட மோகம் தணியவில்லை என்று கூறுகிறுர். வள்ளியின் கை ரேகை மூலமாகத் தன் கல்யாண விஷயத்தை அறிய ஆசைப்பட்ட இடும்பன், முருகனை ஜோஸ்ய

னென்று நினைத்து, அவரிடம் கை காட்டுமாறு வள்ளியை வற்புறுத்துகிருன்.

அவன் விருப்பப்படி முருகன் கைரேகை பார்க்கும் பொழுது, வள்ளியும் அவள் சகோதரர்களும் யானை என்ற சொல்லைக் கேட்டதுமே பயப்படுகிருர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுகிருர்.

முருகனை நாரதர் சந்தித்து, முருகன் தனது அண்ணனை விநாயகனை மறந்து வந்ததாலேயே இத்தகைய குற்றம் நேருவதாகக் கூறவே, முருகன் அண்ணனைத் துதிக்க, விநாயகர் தோன்றுகிருர். அவரிடம் தன் தவறை மன்னிக்குமாறு கூறி, யானையாக மாறிவர வேண்டுகிருர்.

யானை, சகோதரர்களையும், வள்ளியையும் துரத்துகிறது. வள்ளி முருகனிடம் ஓடி வந்து காப்பாற்ற வேண்டுகிருள். முருகன் தன்னை மணந்து கொள்வதாகச் சொல்லச் சொல்கிருர். வள்ளி முதலில் சம்மதிக்கிருள். யானை போய் விடவே, மணக்க மறுக்கிருள். ஆனல் முருகன் மறுபடியும் யானையை வரவழைக்கிருர். வள்ளி முருகனைத் தவிர வேறு யாரையும் மணக்க முடியாதென்கிருள். முருகன் யானையிடம் வள்ளியைத் தூக்கி மலைஉச்சி ஒன்றிலிருந்துஎறியச் சொல்கிருர். கண் விழித்த வள்ளி முருகனைக்கண்டு வணங்குகிருள். அதற்குள் நம்பியின் குரல் கேட்கவே மறைந்த முருகன் அசரீரியாக 'தக்க சந்தர்பத்தில் அவளை மணப்பதாகக்' குரல் கொடுக்கிருர்.



நம்பியும், கதிர் முற்றிவிட்டதாகக் கூறி வள்ளியை அழைத்துச் செல்கிருன்.

வள்ளி, முருகன் தன்னை மணக்கப்போவதைக் கூறியும் நம்பிராஜன் நம்பவில்லை. குருதேவரின் சொற்படி முருகன் சந்நிதானத்தில் வள்ளி முருகனை எண்ணி உருகுகிருள். அச்சமயத்தில் முருகன் காட்சி தருகிருர். வள்ளி முருகன் வந்துவிட்டதாக காட்டுகிருள். ஆனல் நம்பிராஜனுக்கும், மற்றவருக்கும், முருகன் முன்பு வந்த விருத்தனுக காட்சி யளிக்கிருர்.

படுக்கையறையில் துடித்துக் கொண்டிருக்கும் வள்ளிக்கு, மீண்டும் முருகனின் குரல் கேட்க, முருகனின் வேல் தோன்றி வள்ளியை வெளியே அழைத்துப் போகிறது. அதைக் கண்டு நம்பி வள்ளியைத் தடுக்கிருன். கட்டுமீறிவிட்ட வள்ளியை சிறையிலிட உத்தர விடுகிருன்.

சிறையில் வாடும் வள்ளி, முருகனை எண்ணிப் புலம்புகிருள். வள்ளியை நோக்கி வந்த ஒளி முருகனுக மாறி வள்ளியைச் சிறையினின்று அழைத்துச் செல்கிறது. வள்ளி தப்பித்தது கண்டு கோபமுற்று நம்பி போர் தொடுக்கிருன். அதனல் சினங் கொண்ட முருகன் விஸ்வரூபம் அடைகிருர்.........

மற்றவை வெள்ளித்திரையில் !

★★

## ஸ்ரீ வள்ளி

★

பாட்டு 1. இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர்: ஜிக்கி, கோரஸ்.

ஓ ...ஓ... ஓ...
மலைநாட்டுக்குறவர் நாங்க - வில்லைக்
காட்டும் குறவர் நாங்க - பெண்
வேட்டையாட வரும்
காட்டுப் பூச்சிகளை
விரட்டும் ஜாதி தாங்க— (மலை)

கண்ணெ காட்டுனு கன்னத்தில் கொடுப்போம்
கையை நீட்டுனு கணைகளை தொடுப்போம்
பொன்னெ காட்டுனு பொடறியில் கொடுப்போம்
உண்மைக் காகவே உயிர் கொடுக்கும்— (மலை)

கற்பைக் காக்கவே துணிந்த ஜாதிங்க
கவரி மான்போல் வளர்ந்த ஜாதிங்க
அற்பமாகவே நெனைச்சுடாதிங்க
அழகைப் பார்த்தவுடன் அசந்திடாத— (மலை)



வலிய சண்டைக்கும் நெருங்கிட மாட்டோம்
வந்த சண்டைக்கும் பயந்திடமாட்டோம்
மலையைக்கெல்லி எலி புடிச்சிடமாட்டோம்
மானத்தையே விட்டு கொடுத்திட மாட்டோம்-
(மலை)

நாமும் வேடர்குலம் தழைக்க வேணும்-நம்ம-
நாடு காடுகளும் செழிக்க வேணும்—எங்கள்
நம்பிராஜன் புகழ் ஓங்கவே-குறிஞ்சி
நாதன் பாதமே நம்பி வாழும்— (மலை)

## பாட்டு 4.

இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர்: டி. ஆர். மகாலிங்கம்.

உனக்காகவே பிறந்த அழகன் - திரு
உருவான வேல்முருகன் மால் மருகன் (உன)
நினைத்தாலே உள்ளமும் கனியாதா - செந்தமிழ்
நிதியான பதியோடு மகிழ்வாய் சதா
இணையற்ற வீரன் - குமரன் - திருமுருகன்
வெற்றி வடிவேலன் - சக்தி உமைபாலன்
மகிழுறவே - புவனமதில். (உன)
பரமனின் நெற்றிக்கண்ணில் அவதரித்தான்- முருகன்
சரவணப்பொய்கை தன்னில் உருவெடுத்தான்
கரமதில் மலைமகள் கனிந்தே அணைத்திட
ஆறுமுகத்தோடு உடல் ஒன்ருனன்.
அன்பர் தொழும் பாதன்.
ஆறுமுக நாதன்.
குறவர் குலம் பெருமையுற— (உன)
அன்றொரு நாள் குட்டி ப்ரமனை சிறை செய்து
ஆக்கும் தொழில் புரிந்த மறைவேதன்
குன்றமர்ந்தே அன்று
குருபரனாய் நின்று
தந்தைக்குபதேசம் செய்த குருநாதன்- தந்தை
சத்ரு ஸம்ஹாரன் - பக்தர் உபகாரன்
திருமணமே - புரிந்திடவே- (உனக்.)

★

## பாட்டு 5.

இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர்: டி. ஆர். மகாலிங்கம்.

(நாரதர்)

கற்பக சோலையிலே
கற்பக சோலையிலே - தேன்
கனி ஒன்று கனிந்ததடா - முருகா (கற்பக)

அற்புத சிருஷ்டியிலே. ஆ…ஆ…
அற்புத சிருஷ்டியிலே - பிறந்த
அறுசுவை அமுதமடா - முருகா.
அறுசுவை அமுதமடா - முருகா.
கற்பக சோலையிலே.

அறுபடை வீட்டினிலே-முருகா. ஆ…முருகா.
அறுபடை வீட்டினிலே - என்றும்
அமர்ந்திடும் ஜோதியடா - முருகா
அறுபடை வீட்டினிலே - என்றும்
அமர்ந்திடும் ஜோதியடா,

விற்பனர்மரபினிலே - பிறந்த
வேடுவர் திலகமடா
முருகா…முருகா…முருகா…முருகா.

ஆறு பெண்கள் பாலை
அமுதாகவே உண்ட ஐயனே
அருள் மெய்யனே
முருகையனே
எமக்காரும் துணையில்லை துய்யனே
அருமறை போற்றிடும்
குருபரனே - அருள்
வேலனே அம்மை பாலனே.

தந்தைக்கு அந்நாளில்
மந்திரம் ஓதிய தாரகா
எழில் தாயகா மறை நாயகா
எங்கள் சரவணபவகுக ஷண்முகா
தேடும் அன்பர் உள்ளம்
நாடும் ஞானகுரு தேசிகா
செந்தில் வேல் குகா... (தே)

தந்தான தான தனதன
வந்தாடும் மாமயில் வாகன
கந்தா உன் சேவை பணிந்திடவே
பால் காவடியுடனே
வந்தோம் எமை ஆண்டருள்வாய் குருவே
தத்துமி தத்திமி நாதம் முழங்கிட



சித்தர் மருத்துவ கீதம் விளங்கிட
தணிகாசல மேவிடும் வேலப்பா
உனையன்றியே உலகில்
இனிமேலும் துணைதான் யாரப்பா.

★★

எல்லாம் உனது செயல் வேலா-எம்மை
ஆண்டருள்வாய் சிவபாலா

கோரஸ்- எல்லாம் உனது செயல் வேலா-
எம்மை ஆண்டருள்வாய் சிவபாலா-
நல்லோர் பணியும் மறை நூலா-உனை
நாடிய வரமருள் மேலா.

கோரஸ்- எல்லாம் ஜெகமெல்லாம்-
உனது செயல் வேலா- (எ)

★★

செந்தி நகரிலோர் ஆண்டி-பக்தர்
தேடிய போதெல்லாம் அவன் வருவாண்டி
அந்திப்பகலாக வேண்டி-வந்தால்
யாருக்குமே அவன் வரம் தருவாண்டி-செந்தில்
ஆனைமுகன் தம்பிதாண்டி-அவன்
அப்பனும் எப்பவும் அலையும் பேயாண்டி
வானோர் புகழ் வேலன்தாண்டி-நேரில்
வந்தாலும் கண்ணில் காணாத மாயாண்டி-செந்தில்

மோஹனப் புன்னகையில்-எனக்கொரு
மோஹம் பிறக்குதடா-முருகா
ஆகமம் போற்றுதடா-முருகா
ஆவலும் மீறுதடா.
ஆடும் மயில் மீதே விளங்கும்
ஆனந்த ஜோதியடா-முருகா.
அன்பர் இதயமடா-உனக்கு
அறுபடைக் கோயிலடா. (அன்பர்)

சித்தம் இரங்கி வருவாய் அன்பர்கள் தொழும்
தென்பழனி வேல்முருகா-
சக்தி சிவன் புத்திரனே சதுரமறை வித்தகனே
உத்தரவு தரவேணும் உந்தனருள் பெறவேணும்.
கோரும் வரமே தருவாய் அன்பர்கள் தொழும்
குன்றக்குடி வேல்முருகா-
ஏறுமயில் ஏறிவந்து நேரினில் மனம் மகிழ்ந்து
ஆறுதலையோடு வந்து ஆறுதலும் சொல்லவேணும்.
(சி)

பாலாபிஷேகம் பெறுவாய் அன்பர்கள் தொழும்
பரங்கிரி வேல் முருகா.
காலால் துணிந்து அந்த காலனை உதைத்தவனின்
பாலா மனமிரங்கி பக்தர்களைக் காக்கவேணும்.(சி)



முருகா...சண்முகா...வேல்...வேல்...

எட்டடி குச்சுக்குள்ளே-கந்தய்யா
எத்தனை நாள் இருப்பேன்.
ஏழைமுகம் பாரும்-புள்ளிமயில்
ஏறிடும் வேலவனே.

சக்தி சிவன் பாலா-வந்தருள்
சண்முகனே வேலா
பக்தியுடன் பணிந்தோம்-முருகா

பாராமுகம் ஏனோ.
எட்டுத்திசை மகிழ-ப்ரமனை
குட்டி சிறையிலிட்டாய்
துஷ்டர்களை வதைத்தே-பழமுதிர்
சோலை அமர்ந்தவனே—

ஏழை மனங்குளிர-வந்தருள்
எம்பெருமாள் மகனே—திரு
மாலின் மருகோனே-திருத்தணி
மலையின் வேலவனே.

★

பாட்டு **6.** **இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.**
**பாடியவர்: டி. எம். சவுந்தரராஜன்.**

(முருகன்)

ஆதியந்தமும் இல்லாத நாயகா— ஆ...ஆ...ஆ...
ஆதியந்தமும் இல்லாத நாயகா

அருள்வாய் எங்கள் தாயகா
ஆதியந்தமும் இல்லாத நாயகா
அருள்வாய் எங்கள் தாயகா.

ஜோதி தவழும் வேதாந்தப்ரம்மமே
தூய ஞான ஒளி தீபமே
ஜோதி தவழும் வேதாந்த ப்ரம்மமே
தூய ஞான ஒளி தீபமே.
நாதரூபமே...ஆ...ஆ...ஆ...
நாத ரூபமே ஓம் சிவாயமென
நவிலும் ஓங்காரமே,
அம்பிகை மகிழும் தேவா
அன்பர்கள் இதய ஜீவா
அம்பிகை மகிழும் தேவா
அன்பர்கள் இதய ஜீவா.
ஆதாரமுன் பாதாரமே.

அமைதி நிலவும் ஆனந்த வாழ்வு பெற
ஆதியந்தமும் இல்லாத நாயகா
அருள்வாய் எங்கள் தாயகா.

★



பாட்டு **7.** **இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.**
**பாடியவர்: ஜிக்கி, கோரஸ்**

மானைத்தேடி வந்தவரே
மாப்பிள்ளை சிங்கம்—மத
யானையை போலே நிக்காதே
மாப்பிள்ளை சிங்கம்.

பெண்— பூனை குத்துர குறவன் போல
முழிக்கிற

பெண்— பெண்களைப் பார்த்ததும் பைத்யம்
போலவே முறைக்கிற

பெண்— மான வெட்கமே இல்லாமல் நீ
சிரிக்கிற.

பெண்— வீரன் போலவே-சூரன் போலவே
வில்லை நீட்டுற—பல்லைக்காட்டுற(மானை)

கிள்ளி— ஐயோ மச்சான் மன்னுரு—உங்க
அப்பா என்னு சொன்னுரு (ஐ)

அடியம்மாடி இவர்
அசந்து ஏண்டி நின்னுரு- (ஐ)

கணக்கு பண்ணவே-நினைச்சவருக்கு
கணக்கு புரியலே-அவன்
கையும் காலும் துடிக்கிதடி
எதுக்கு தெரியலே.

கன்னி பெண்களை பார்த்த உடன்
மனசும் சரியில்லே.
காளையை விட்டுட்டு-வாலை புடிக்கிற
கோழையை போலே-ஏங்குவதேன்.(ஐ)

பாட்டு **8.** **இயற்றியவர் : தஞ்சை ராமய்யாதாஸ்.**
**பாடியவர் : டி. எம். சவுந்தரராஜன்.**

காயாத கனல் பாய கவணேந்தி விளையாடும்
கலையினமே
காயாத கனல் பாய கவணேந்தி விளையாடும்
கலையினமே
தேயாத நிலவு போல் தெய்வீக ஒளி வீசும்
கலைச் செல்வமே
தாயாதி மாமனை கண்டது போல் புன்முறுவல்
செய்தாலும்-தலை
சாயாத மான் நல்ல ஜாதி மான்
துள்ளிப் பாயாத மான்
சாயாத மான்-ஓஹோ.
நல்ல ஜாதி மான்-அப்படியா
துள்ளிப் பாயாத மான்-தலை
சாயாத மான் - பாயாத மான்
கானல் வனமாய் செழித்தாலும்
துள்ளிப் பாயாத மான்

கற்பனைக் கெட்டாத ஒரு அற்புதப் புதுமையோடு
காவனத்தில் ஆயலோட்டி கன்னிப்பருவம்
நிறைந்தும் பாயாத மான்
கணையில் படாத நிலையிலே-மெய்க்

காதல் உலாவும் வலையிலே
கணையில் படாத நிலையிலே-மெய்க்
காதல் உலாவும் வலையிலே-உளம்
கனியவே மனம் மகிழவே-தனதினத்தை மறந்து
வனத்தில் வசித்தும் பாயாத மான்
காவன மீதினில் தீவிரமாகவே-காவல்
புரிந்திடும் சுந்தரமான்.

கலவைச் சந்தனக் கதம்ப வாடை
கமழும் அழகிய யௌவனமான்
கங்கண கண கண வென்று முழங்க
சதங்கை குலுங்கும் சுதந்திரமான்
கலங்காது...ம்...ஆ...ஆ...
கலங்காது கணையைக் கண்டு மயங்காது
கலங்காது கணையைக் கண்டு மயங்காது
மனமும் தயங்காது—மறைந்து பதுங்காது
மதியும் தவறாது—எதையும் மதியாது
அநுதினமும் தினைக்காவல் புரிந்தாலும்
அமுதகலை தவழும் நிலை
குமுத மலர் எழில் வதனம்-வாடாத மான்
வந்ததுண்டோ உந்தன் பார்வையிலே.
உந்தன் பார்வையிலே...

★



பாட்டு 9. இயற்றியவர் : தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர் : ஜே. பி. சந்திரபாபு.

ஐயோ மச்சா மன்னாரு-ஏன்
அங்கே போயி நின்னாரு
அழகாத்தான் ஒதையை வாங்கித் தின்னாரு.

இடிச்ச இடியில் கன்னங்கூட
செவந்து கிடக்குது - அட
ஏண்டா மச்சான் உனக்கு இப்படி
விருந்து நடக்குது-

அடிச்ச அடியில் கொழுக்கட்டை போல்
தடிச்சு கிடக்குது-
ஊரைக் கெடுத்திட்டு
பேரைக் கெடுத்திட்டு
யாரைக் கெடுத்திட வந்தாயிங்கே. (ஐயோ)

★

பாட்டு **10.** இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர்: பி. சுசீலா
டி. எம். சவுந்தரராஜன்.

வண்ணமிகும் பறவைகளா - ஹ...ஹ...
வானம்பாடி குருவிகளா
கன்னங்கரு காகங்களா - ஹ...ஹ...
காடை கௌதாரிகளா
சோ...சோ...சோ...

ஆயலோட்டும் பெண்ணே.
ஆயலோட்டும் பெண்ணே
அநுராக சித்திரக்குயிலே-அசைந்தாடும்
சுந்தர மயிலே.
அன்பே - ஆரமுதே. (ஆய)

இந்தக் காலில் கவண் வீசி நின்று
ஆயலோட்டும் பெண்ணே
பொல்லாத மாறன்
வில்லேந்தினனே-
உல்லாச வேளையிதானே.
ஓடி வந்தேனே-

மாருத காதல் இன்பத்தாலே
மன்றுடி ஏங்கி நின்றதாலே-
கல்லான உள்ளம் இனி மாருதா-உன்
கல்லான உள்ளம் இனி மாருதா
கனியாதா இன்னும் வாதா
கண்ணே உன் மனமிரங்காதா. (ஆய)

★



பாட்டு **11.** இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர்: சீர்காழி கோவிந்தராஜன்

(கிழவன் பாட்டு)

வண்ணத் தாமரையில் மின்னும் நீர்க்குமிழி
வாழ்வுதான் உலகில் சதமா
வண்ணத் தாமரையில் மின்னும் நீர்க்குமிழி
வாழ்வுதான் உலகில் சதமா... முருகா.

மண்ணுலாடும் இளமாதராசையெனும்
மாயலீலை எதும் நிஜமா
வண்ணத் தாமரையில் மின்னும் நீர்க்குமிழி
வாழ்வுதான் உலகில் சதமா.
(இருமல்) அப்பனே சண்முகா.
ஆசையாவும் வென்ற பிறவி-ம்...ம்.
என்ன வாழ்வு இது.

ஆசையாவும் வென்ற பிறவி-பந்த
பாசம் யாவும் அற்ற துறவி
ஆடி ஓடி இன்று ஆவலாக வந்த
தாடிக்காரன் சொல்லை உணர்வீர்-இந்த
தாடிக்காரன் சொல்லை உணர்வீர் (வண்ண)

★

பாட்டு 12. இயற்றியவர் : தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர் : சீர்காழி கோவிந்தராஜன்.
பி. சுசீலா.

தாகம் தணிந்தது...
தாகம் தணிந்தது அன்னமே-
என்று
மோகம் தணியுமோ சொர்ணமே
-என் (தாகம்)

சாகஸம் பண்ணுதே தங்கமே-
தங்கமே-குறத் தங்கமே-
சாகஸம் பண்ணுதே தங்கமே-உனக்கு
சரியான ஜதை இந்த சிங்கமே— (தாகம்)

தள்ளாடி தள்ளாடி
தள்ளாடி தள்ளாடி தையத்தா-போடும்
சுவாமிகள் போல் வந்த தகிடுதத்தா- (தள்ளாடி)

சல்லாப கிழம் நல்ல அறிவுத்தான்
சல்லாப கிழம் நல்ல அறிவுத்தான்
பெண்கள்
சபலத்தில் அதுகொஞ்சம்-
குறைவுத்தான் -
பெண்கள்
சபலத்தில் அதுகொஞ்சம்
குறைவுத்தான் (தள்ளாடி)

★



பாட்டு 13. இயற்றியவர் : தஞ்சை ராமய்யாதாஸ்
பாடியவர் : சீர்காழி கோவிந்தராஜன்.

விக்ன விநாயகா விரும்பும் உன் அடியார்கள்
வினை தீர்த்திடும் தாயகா

பொற்குலக்கொடி ஒன்று புனத்தினில் தவழ்ந்து
ஐம்புலனையும் கவர்ந்து நின்றாள்.

சற்குருவான என் தமையனே அன்று உனை
சரண்புகாதென் குற்றமே.

தக்கதோர் தருணத்தில் சமய சஞ்சீவியென
தயைபுரிய ஓடி வாராய். — அண்ணா.

பாட்டு 14. இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர்: பி. சுசீலா

காளான் குடைபிடிக்க கட்டெறும்பு மேளங்கொட்ட
ஏலாத கிழமே நீ என்னை வந்து தாலி கட்ட
முடியுமா?
ஏய்ச்சுப்புட்டேன் நான் ஏய்ச்சுப்புட்டேன்
-உன்னை
ஏமாற வச்சுட்டேனே தாத்தா-
சரி போகட்டுண்ணு விட்டுப் பாத்தா-பசி
தாகத்தையும் நான் தீத்தா-இளம்
பெண்ணுளேயே-கிழட்டு
கண்ணுல பாத்துக்கிட்டு
கிண்ணாரம் கொட்டுதடி ஆத்தா.

பாட்டு 15. இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர்: சீர்காழி கோவிந்தராஜன்.

அஞ்செழுத்தான் கண்டதொரு
யானை முகத்தானும் வர-
ஆறெழுத்தான் துணிஞ்சுவிட்டால்
அஞ்சாமல் தாலிகட்ட-தெரியுமா?
ஏச்சுபுட்டேன் நான் ஏச்சுபுட்டேன்-உனே
ஏமாற வச்சுட்டேனே வள்ளி-
ஏச்சுபுட்டேன் நான் ஏச்சுபுட்டேன்-உனே
ஏமாற வச்சுட்டேனே வள்ளி-
சும்மா தாண்டிக்குதிக்காதே துள்ளி-வாய்
சரக்கை வீசாதே அள்ளி-
தாண்டிக்குதிக்காதே துள்ளி-வாய்
சரக்கை வீசாதே அள்ளி
ஒட்டாரம் பண்ணுதே ஒயிலாட்டம் போடாதே.
கட்டான காளை இந்த புள்ளி- (ஏச்சுப்)

பாட்டு **16.** **இயற்றியவர் : தஞ்சை ராமய்யாதாஸ்.**
**பாடியவர் : பி. சுசீலா.**

ஓம் சரவணபவ ஓம் சரவணபவ ஓம் சரவணபவ.
சண்முகா சக்தி வடிவேலா
கண்ணீரைக் காணிக்கை செய்தாலும்
-உன்மனம்
கரையாதோ கனிந்திடாதோ...ஓ...ஓ...கருணாநிதே
உன் கருணையே பிறந்திடாதோ...ஓ...ஓ...
இதய கோயிலிருக்க இங்கு நீ அமர்ந்தே
இருப்பதுதான் முறையாமா- (இதயக்)

ஏழையும் உன்னோடு வாழவே பிறந்தேன்
எண்ணமெல்லாம் கனவாமோ-முருகா...ஆ...ஆ.
ஏழையும் உன்னோடு வாழவே பிறந்தேன்
எண்ணமெல்லாம் கனவாமோ
இனியும் உன் நினைவாலே தனிமையினால் நெஞ்சம்
ஏங்கிடும் நிலை வரலாமோ
மரமாகி நின்ற அசுரனை அன்று
இருகூறு செய்த முருகா-
மயிலாக சேவற்கொடியாக ஏந்தி
மகிழ்ந்தோடி வந்த முருகா-

குறவர் எங்கள் குலத்தை நாடி-மானை
குலவ வந்த முருகா-
குருபரா எதிரில் ஒருமுறை வந்து
குறையைத் தீரும் முருகா...ஆ...ஆ...
உருவம் கல்லாக மாறிடினும்
உள்ளம் கல்லாக மாறுவதோ -(உருவம் கல்லாக)
உருகாதா மனம் உருகாதா. (உருகாதா.)
முருகா...முருகா...முருகா..

பாட்டு **17.** இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர்: பி. சுசீலா.

உன்னையே தெய்வமென எண்ணி வரும் மக்களும்,
மண்ணிலே மடிவதும் சரியோ
பன்னிரு கரங்களால் அபயம் தராமலே,
பாதகம் செய்வதும் முறையோ
கன்னி என் வாழ்விலே என்னையே அறியாமல்,
என்னதான் நான் செய்த குறையோ
உன் அருள் இல்லையேல், என்-
உயிரையும் ஏற்றுக்கொள் முருகா...
முருகா..முருகா..முருகா...

Ideal Printers, 97, Broadway, Madras-1

பாட்டு **18.** இயற்றியவர்: தஞ்சை ராமய்யாதாஸ்.
பாடியவர்: டி. ஆர். மகாலிங்கம்.

ஞானப்பழமே...
ஞானப்பழமே...மெய் ஞானப்பழமே
ஞானப்பழமே...மெய் ஞானப்பழமே.
நான்மறை புகழும் நாதா
நாளும் அருளும்.. (ஞான)
கோரஸ்- சண்முகா...குகா...முருகா...
கானுறை வள்ளியும் குஞ்சரியும் மகிழ
கார்த்திருந்தோம் கதிர்வேல் முருகா.
கோரஸ்- சண்முகா..குகா...முருகா...
கலைச்செல்வம் புகழ்ச் செல்வம்
சகல செல்வமும் தந்து கார்த்தருள்வாய்
சக்திவேல் ஷண்முகா-
கோரஸ்- (ஷண்முகா) குகா...முருகா...

ஒளிப்பதிவு டைரக்ஷன்— K. H. கபாடியா.
பாபுபாய் உதேசி.

தந்திரகாட்சி ஒளிப்பதிவு- பாபுபாய் உதேசி.

ஒலிப்பதிவு டைரக்ஷன்— K. ராமச்சந்திரன்.

நடன அமைப்பு —K. N. தண்டாயுதபாணி பிள்ளை.
P. S. கோபாலகிருஷ்ணன்.
T. C. தங்கராஜ்.
V. மாதவன்.

உடை அலங்காரம்— M. G. நாயுடு
A. அங்குசாமி.

ரீ ரிக்கார்டிங் இசையமைப்பு— C. N. பாண்டுரங்கன்.

ஆர்ட் டைரக்ஷன் — கங்கா.

ஸ்டில்ஸ் — போட்டோ ஆர்ட் சென்டர்.

மேக்கப் — தனக்கோடி
ரெங்கசாமி.

எடிட்டிங் — R. ராஜகோபால்.

புரொடக்ஷன் மானேஜர் — V. நாராயணன்.

## உதவியாளர்கள்.

டைரக்ஷன் —K. ஷண்முகம்
P. M. மணி.

ஒளிப்பதிவு —ஏகாம்பரம்.

ஒலிப்பதிவு —N. V. சேஷன்,
M. சியாம்பட்

எடிட்டிங் —B. கோபால்
T. V. ஷண்முகம்.

மேக்கப் —A. K. மோகன்.

சவுண்டு புராஸஸிங் —மதராஸ் சினி லாபரெட்டரி.

விளம்பர டிசைன்—ஸ்டுடியோ சர்மா T. V. S.

கேவாக்கலர்

புராஸஸிங் & பிரிண்டிங்

**பிலிம் சென்டர்**

பம்பாய்.

Recorded on Westrex Sound System.

இப்பொழுது
வெற்றிகரமாக
நடைபெறுகிறது

—★—

வாசு பிலிம்ஸ்

கைராசி

ஜெமினி கணேசன்,
சரோஜாதேவி.


—★—

நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸ்

மன்னாதி மன்னன்

எம். ஜி. ஆர்.
பத்மினி,
அஞ்சலிதேவி.

—★—



விரைவில்
எதிர்பாருங்கள்!

லட்சுமி பிக்சர்ஸ்

நல்லதாரம்

மணக்கலங்காரம்

—★—

பாரகன் பிக்சர்ஸ்

நீதிக்கொரு பெண்.

—★—

விபரங்கட்கு: செட்டியார் பிலிம்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
திருச்சிராப்பள்ளி-2.